## இலங்கை றக்பி - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை றக்பியின் ("இலங்கை றக்பி") 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து இலங்கை றக்பியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை றக்பி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது இலங்கை றக்பியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இலங்கை றக்பியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை றக்பியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு இலங்கை றக்பி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி இலங்கை றக்பியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு இலங்கை றக்பிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் இலங்கை றக்பியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- இலங்கை றக்பியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- இலங்கை றக்பியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- இலங்கை றக்பி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- இலங்கை றக்பியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | இலங்கை பாடசாலைகள் றக்பி கால்பந்தாட்ட | 17,492,313 | எழுத்துமூலமான உடன்படிக்கை அல்லது எதாவது ஆதாரப்படுத்தும் | குறித்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ் விடயத்தை | மீதியை சரிபார்ப்பதற்கு பெறவேண்டியவைகள் தொடர்பான |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சங்கத்திடமிருந்து பெறவேண்டியவை | | ஆவணங்கள் | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | போதியளவு ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெற வேண்டியவைகள் | 23,543,737 | மீதி உறுதிபப்டுத்தல்கள் | குறித்துக் கொள்ளப்பட்டள்ளதுடன் எதிர்காலத்தில் இவ் விடயத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதியை சரிபார்ப்பதற்கு கணக்காய்விற்கு பெற வேண்டியவைகளின் உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | செலுத்த வேண்டியவைகள் | 16,047,113 | மீதி உறுதிப்படுத்தல்கள் | குறித்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவிவிடயத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டியவைகள் தொடர்பான போதியளவு உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 7,121,662 | பௌதீக ரீதியான மெய்மையாய்வு அறிக்கை | குறித்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ் விடயத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனம் பொறி மற்றும் உபகரணத்திற்கான பௌதீக ரீதியான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவுள்ள ரூபா 218,533 கூட்டுத்தொகையான 04 பெறவேண்டிய மீதிகள் மற்றும் 02 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவுள்ள ரூபா 18,974,324 கூட்டுத்தொகையான ஏனைய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் நிறைவேற்றுச் சபையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | வெளித்தரப்பினர்களிடமிருந்து பெறவேண்டியவைகளை சேகரிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஒரு ஆண்டிற்கு மேலாக காணப்பட்ட ரூபா 13,497,205 கூட்டுத்தொகையான 07 செலுத்த வேண்டிய மீதிகள் மற்றும் 02 ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாதிருந்த ரூபா 2,603,175 தொகையான மீதி என்பவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் போதுமானளவு நிதிகள் பெறப்பட்ட பின்னர் தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | காலரீதியாக வெளித்தரப்பினர்களிற்கு செலுத்த வேண்டியவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,109,470 ரூபா 1,617,242 மற்றும் ரூபா 2,938,937 தொகைகள் றக்பியை அபிவிருத்தி செய்வதற்காக முற்பணங்களாக மாகாண றக்பி சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அம் முற்பணங்கள் 2019 மே மாத இறுதி வரையிலும் தீாப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டினுள் முற்பணங்கள் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396(ஈ) | ரூபா 192,000 தொகையான ஆறு மாதங்களிற்கு மேற்பட்ட 05 நிலுவையாகவுள்ள காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்நிலுவைக் காசோலைகளை உடனடியாக இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆறு மாதங்களிற்கு மேற்பட்ட காசோலைகளிற்கான நிலுவைகளிற்காக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவு | 2018 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் பெறுகை திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக்கோவையின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 28,672,002 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 14,559,671 ஆக காணப்பட்டதனால் நிதி விளைவுகளில் ரூபா 14,112,331 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் முறையே ரூபா 27,012,067 மற்றும் ரூபா 11,102,743 ஆல் குறைவடைந்தமை இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை றக்பி அரசியலமைப்பின் 14.1(ஓ) மற்றும் (ஓ) பிரிவுகளின் பிரகாரம் தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகள் றக்பி கால்ப்பந்தாட்டச் சங்கம், இலங்கை பல்கலைக்கழக விளையாட்டுச் சங்கம், இலங்கை றக்பி கால்பந்தாட்ட நடுவர்கள் சங்கம் மற்றும் இலங்கையின் மாகாண றக்பி கால்ப்பந்தாட்ட கழகங்கள் உள்ளடக்கிய இலங்கை றக்பி உறுப்பினர்கள் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் 45 நாட்களினுள் பட்டயக் கணக்காளர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் அலுவலகப் பொறுப்பாளர்கள் மற்றும் ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலகத்தினதும் குழு உறுப்பினர்களின் சுயவிபரக் கோவை, உரிய வருடாந்த பொதுக் கூட்டத்தின் உறுதிப்படுத்தப்பட்ட கூட்டக் குறிப்பு பிரதி மற்றும் வரவுச் சான்றிதழ், கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் சான்றுறுதிப்படுத்திய பிரதி மற்றும் அத்தகைய கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் அவர்களது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்பற்றப்பட்டிருந்ததை உறுதிப்படுத்துவதற்கு அவர்களது உறுப்பினர் பட்டியல், இலங்கை றக்பி வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னரான விளையாட்டுக்கள் மற்றும் ஏனைய நிகழச்சித்திட்டங்களின் விபரங்கள் | 2019 ஆம் ஆண்டில் இதனை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை றக்பி அரசியலமைப்பின் பிரகாரம் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

உள்ளடக்கிய ஏனைய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் இலங்கை றக்பி இத் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

## 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 85,633 மற்றும் ரூபா 108,738 பெறுமதியான 13 வகைப்படுத்தல்களின் முறையே விளையாட்டு உபகரணம் மற்றும் விளையாட்டு ஆடையணிகள் முறையே 02 ஆண்டுகள் மற்றும் 04 ஆண்டுகளாக விளைவற்றிருந்தன. | விளைவற்ற இருப்புக்களிற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்பை முகாமை செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை றக்பிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியணியினர் காணப்படவில்லை. | எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் பதவியணியினரை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திறனான மனித வள முகாமைத்துவத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியணி தயாரிக்கப்பட வேண்டும். |